4th August 1966]

ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பது அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா? சென்ற ஆண்டு பஞ்சநிலை, இந்த ஆண்டு ஏற்பட்டிருக்கக்கூடிய வறட்சி நிலை, தண்ணீர்த் தட்டுப்பாடு இவற்றையெல்லாம் மனத்திலே கொண்டேனும் குறைந்தபட்சம் ஒரு ஆண்டு காலத்திற்கு வரி விதிப்பதைத் தள்ளி வைப்பதற்கு உடனடியாக ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால், இந்த வருஷம் திருநெல்வேலி ஜில்லாவில் வறட்சி என்று சொல்வது பொருத்தமில்லை, ஒரு சில இடங்களைத் தவிர.

தண்ணீர் தட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்ட பயிர்கள்

*80 **கேள்வி—திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கனம் உணவு அமைச்சர் அவர்கள் சமீபத்தில் தஞ்சை மாவட்டத்தில் தண்ணீர் தட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்ட நெற் பயிரின் நிலைமையை நேரில் காணச் சுற்றுப்பிரயாணம் செய்தது உண்மையா?

(இ) ஆமெனில், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிலவரி வஜா செய்ய மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) ஆம்.

(இ) தகுதியுள்ள விஷயங்களில் வருவாய்த்துறை வாரியநிலை ஆணைகளின் கீழ் பருவகாலத் தள்ளுபடி வழங்கப்பட்டுள்ளது. தீர்வை ஜாஸ்திப் பகுதிகளில் போதிய தண்ணீர் சப்ளை இல்லாமல் தாளடிப் பருவத்தில் பயிர்கள் சாவிரியாகிப் போனதால், எப்போதேனும் ஒருமுறை பாசனம் தேவைப்படுகிற வேர்க்கடலை, எள் போன்ற புன்செய்ப் பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன. அந்தப் பகுதிகளில் தண்ணீர்த் தீர்வை விதித்து வாங்கப்படமாட்டாது.

கீழ்க்கண்ட கூடுதலான சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளன:—

(1) பதிவான இருபோக நன்செய் நிலங்கள் :

(a) விளைச்சல் நான்கணுவாகவும் அதற்குக் குறைவாகவும் இருந்தால்.	இரண்டாம் போகப் பயிர்க் கட்டணம் முழுவதும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.
(b) விளைச்சல் நான்கணுவுக்கு மேல், ஆறணுவுக்கு மேற்படாமல் (ஆறணுவாக அல்லது அதற்குக் குறைவாக) இருந்தால்.	இரண்டாம் போகப் பயிர்க் கட்டணத்தில் 1/4 பாகம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

(2) பதிவான ஒரு போக நன்செய் நிலங்கள் :

(a) விளைச்சல் நான்கணுவாகவும் அதற்குக் குறைவாகவுமிருந்தால்.	தண்ணீர்த் தீர்வை அல்லது பசலி ஜாஸ்தி முழுவதும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

(b) விளைச்சல் நான்கணுவுக்கு மேல், ஆறணுவுக்கு மேற்படாமல் (ஆறணுவாக அல்லது அதற்குக் குறைவாக) இருந்தால்.	தண்ணீர்த் தீர்வை அல்லது பசலி ஜாஸ்தியில் 1/4 பாகம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

(3) பதிவான புன்செய் நிலங்கள் :

(a) விளைச்சல் நான்கணுவாகவும் அதற்குக் குறைவாகவுமிருந்தால்.	தண்ணீர்த் தீர்வை முழுவதும் தள்ளுபடி செய்யப்படும்.
(b) விளைச்சல் நான்கணுவுக்கு மேல், ஆறணுவுக்கு மேற்படாமல் (ஆறணுவாக அல்லது அதற்குக் குறைவாக) இருந்தால்.	தண்ணீர்த் தீர்வையில் 1/4 பாகம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

ஒரு சர்வே எண் அல்லது சப்-டிவிஷன் சம்பந்தமாக, வருவாய்த் துறை வாரிய நிலை ஆணையின் கீழாவது அரசாங்கம் வெளியிட்டுள்ள எந்தச் சிறப்பாணைகளின் கீழாவது நிலவரி முழுவதுமோ அல்லது அதன் ஒரு பகுதியோ தள்ளுபடி செய்யப்பட்டிருந்தால், தமிழ்நாடு 1965-ம் ஆண்டு நிலவரி—தண்ணீர்த் தீர்வை சர்சார்ஜ் சட்டத்தின் கீழ் சர்சார்ஜ் முழுவதும் 1375-ம் பசலியில் தள்ளுபடி செய்யப்படும். மற்ற எல்லா விஷயங்களிலும் 1375-ம் பசலிக்கான சர்சார்ஜை அரசாங்கம் 10 சதவிகிதத்திற்குக் குறைத்து, எஞ்சியுள்ள 15 சதவிகிதத்தைத் தள்ளுபடி செய்துள்ளது.

திரு. கோ. சி. மணி: தலைவரவர்களே, சென்ற முறை இந்த மன்றத்தில் இதே பிரச்னையைப்பற்றிக் கேட்ட கேள்விக்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் பாசன வசதியில்லாமல் தஞ்சை மாவட்டத்தில் தரிசுபட்ட நிலங்கள் 22,550 ஏக்கர் என்று சொன்னார்கள். கும்பகோணம் தாலுகாவில் குறுவைச் சாகுபடியில் தரிசு இல்லை என்று சொன்னார்கள். குறுவையில் தரிசு ஏராளம் இருக்கிறது என்று சொல்லப்பட்டபொழுது அவர்கள் அதைப்பற்றி மறு பரிசீலனை செய்வதாக உறுதி தந்தார்கள். அதுபற்றிய விவரங்கள் சொல்வார்களா ?

கனம் திரு. வெ. ராமையா: அதைப்பற்றித் தனிக் கேள்வி போட்டால் விவரம் சொல்லலாம்.

நிலவரி வஜா

*81 கேள்வி—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965–66-ல், பருவ மழை தவறியதால் பாதிக்கப்பட்ட இடங்களில் நிலத் தீர்வை வஜா செய்ய அரசாங்கத்துக்கு உத்தேசமுண்டா ?

(இ) ஆமெனில், எந்தெந்த மாவட்டங்களில் ?